மாதாந்த சஞ்சிகை

முடியும் வரை முயற்சிப்போம்

# திறனொளி

THIRANOLI ART & CULTURE MEDIA NETWORK

2017 ஜூன் – ஜூலை | 25/- | திறன் – 09



## உள்ளே!


வாசகர் வட்டம்
ஆரோக்கியமும் சுகவாழ்வும்
கவிதை தூறல்கள்
குர்ஆன் மத்ரஸா அறிமுகம்
மாணவர்களின் ஆக்கங்கள்
தீனுல் இஸ்லாம்
மருத்துவத் தகவல்கள்
பல்துறைத் தகவல்கள்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அறிமுகம்
[illegible]துறை சார்ந்தோரின் பேட்டி
[illegible] அறிமுகம்

*பரிசினைப் பெற்றுத் தரும்*
*திறனொளியின் கேள்வி பதில் உள்ளே!*

திறனொளியின் திறமையின் தேடல் விருது வழங்கும்
போட்டி நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள்
திறன்–10இல்
எதிர்பாருங்கள்!

**Let's learn English with effortless way**

By :
Mr. M.T. RuMi KhAAn
(Director of Royal Future
The college of effortless way)




page 13



Dr. Al-haj. ZA. Bazeer JP
Proprietor

**BAZEER TRAVELS & TOURS**
Agency for Hajj, Umrah Pilgrims
Reg.No: MRCA/Umrah/143/2015



**Eastern Jewellery**
22, Central Road, Sammanthurai-04.
Tel: 0773621628, 0758704065

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!

## வாசிப்பை நேசிப்போம்.

கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது முன்னோர் கூறிய பழமொழி.
வாசிப்பு ஒருவனைப் பூரண மனிதனாக்கும் என்பது பொன்மொழி.
இவை இரண்டும் வாசிப்பின் வாசனையை ஒளிர வைக்கிறது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது பழமொழி என்றே பலர் கூறுவர். இது பழமொழியல்ல ஔவையார் கூறிய பொன் மொழி.

அறிந்தவர்கள் கூறினால் பொன் மொழி என்றும் அறியாதவர்கள் கூறி இருந்தால் அதனைப் பழமொழி என்பதும் இன்றைய சில இளசுகள் அறியாதவை.

தொல்லை தரும் கைத் தொலைபேசிகளும் தொலைக் காட்சிகளும் இன்று வாசிப்பை நாசப் படுத்தி விட்டது.
வாசிக்கத் தெரியாவிட்டால் எதையும் நாம் புரிந்து கொள்ள முடியாது. இன்று
அனேகர் குறிப்பாக எண் கணிதப் பாடத்தில் தவறக் காரணம் வினாக்களை வாசித்து கிரகிக்க முடியாமல் போவதேயாகும்.

நாம் வாசிப்பை நேசிப்பது மூலம் சமூக நேசங்கள் எமது சுவாசமாகிறது. அதனால் மற்றவர் உணர்வுகளை உணர முடிகிறது. மற்றவர் உணர்வுகளை புரிந்து கொண்டிருந்தால் இன்றைய எமது பிரச்சினை என்றோ ஒழிந்திருக்கும்.

நாம் அனைவரும் வாசிப்பை நேசிப்போம் சமூக நேசத்தைச் சுவாசிப்போம் இவை புதிய சமுதாயத்தை உருவாக்கலாம்.
அதற்காக நாம் வாசிக்க முயற்சிப்போம்.

-ஆசிரியர்-


**திறனொளி**
சஞ்சிகைக் குழு

**தலைவர்**
**பிரதம ஆசிரியர்**
**கலைச்சுடர் ஏ.சி.நௌஷாத்**
(அறிவிப்பாளர்)

**ஆசிரியர் குழு**
எஸ்.அப்துல் றாஸீக் JP
(ஓய்வு பெற்ற அதிபர்)
எப்f.எம்.இஹ்ஸான்
இஸ்மாயில் எம் நையூப்f
மௌலவி ஏ.ஆதம்பாவா (B.A)
மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)
அல்-ஹாபிழ் பி.எம். பர்ஹானுத்தீன்
கலைஞர் ஐ.எல்.பரீட்
ஏ.ஆர்.எம்.ஹுஸைன்
எம்.எஸ்.அப்துல் மஜீட்
கவிதாயினி எம்.ஐ.றமீஸ் நிசா Tr

**ஆலோசகர்**
கலாபூஷணம் மாறன் யூ ஸெயின்
(ஓய்வு பெற்ற அதிபர்)



Editor
Thiranoli
112, Firthous Palli Road
Sammanthurai - 03
Hot Line :- 067 490 54 03
E-mail:- thiranoliacmn@gmail.com


நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்!
"எவன் மக்களின் பணத்தை (அல்லது பொருட்களை) திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அவன் சார்பாக அல்லாஹ்வே அதனைத் திருப்பிச் செலுத்துவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணமின்றி அதை (ஏமாற்றி) அழித்து விடும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அல்லாஹ்வும் அவனை அழித்து விடுவான்"


**ஆஸாத் பாலர் பாடசாலை**
**Aazath Pre School**
EPC/PSEB/AM/SAM/T/014
**புதிய மாணவர்கள் அனுமதி- 2018**
சிறார்களின் கல்விக்கு வித்திடும் ஆஸாத் முன்-பள்ளி பாடசாலைக்கு 2018ம் கல்வியாண்டுக்கான புதிய மாணவர்கள் LKG, UKG அடிப்படையில் 3 வயது தொடக்கம் 5 வயது வரை சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.
புதிய கட்டிட திறப்பு விழாவை முன்னிட்டு முதலில் சேர்ந்து கொள்ளும் சிறார்களுக்கு சேர்வுப் பணமின்றி சேர்த்துக் கொள்ளப்படுவதோடு பரிசுப்பொதியும் வழங்கி வைக்கப்படும்!
மட்டுப்படுத்தப்பட்ட சிறார்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர், பதிவுகளுக்கு முந்துங்கள்!
மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும்
பணிப்பாளர்
ஆஸாத் பாலர் பாடசாலை
அம் 12ம் வீதி, உடங்கா-01
சம்மாந்துறை
தொ.இல: 077 91 75 963

# களச் செய்திகள்

தயாரிப்பு - இஸ்மாயில் எம் நையூப்


## சம்மாந்துறை ஓய்வூதிய நலன்புரி சமூக சேவைச் சபை






சம்மாந்துறை ஓய்வூதிய நலன்புரி சமூக சேவைச் சபையின் மாதாந்த கூட்டம் அண்மையில் ஓய்வு பெற்ற கிராம சேவகர் ஜனாப் எம்.ஏ. மன்சூர் அவர்களின் இல்லத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்திற்கு தலைவர் அல்-ஹாஜ் ஏ.எல்.எம்.யாசீன் அவர்கள் தலைமை வகித்தார். இக்கூட்டத்திற்கு விசேட அதிதியாக மாவட்ட ஆயுள்வேத வைத்திய அதிகாரி டொக்டர் ஜனாப். எம்.சி. எம். காலித் அவர்கள் கலந்து கொண்டு "முதியோர்கள் உண்ணவேண்டிய உணவு வகைகளும் தவிர்க்க வேண்டிய உணவு வகைகளும்." என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இவ்வுரை முதியோருக்கு மட்டுமல்லாமல் சகல வயதினருக்கும் மிகவும் பிரயோசனமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. வைத்திய அதிகாரி அவர்கள் பேசும் போது நோய்கள் இரு வகைப்படும் எனவும் அதனை தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் எனவும் குறிப்பிடலாம். இதற்கு மண் என்பதை கருப்பொருளாக எடுத்து விளக்கினார். மண்ணில் விளையும் பொருட்களை நாம் உண்டு மகிழ்கின்றோம். உணவில் கூறுகள் 7 அவைகள் எமக்கு கிடைக்க வேண்டும். கர்ப்பவதியான தாய் உண்ணும் உணவு வயிற்றில் வளரும் பிள்ளைக்கு பயன்படுகிறது. பிள்ளை வளர்வதற்கு நாளுக்கு நாள் வெவ்வேறான உணவுகள் தேவைப்படுகின்றது. உணவுக்கு உணவே மருந்து என்பர். உதாரணமாக பச்சை நிற உணவுகள் பழங்கள் காய் கறிகள் குளிராக இருக்கும். குளிரைக் கட்டுப்படுத்த வெள்ளைப்பூடு சேர்த்து சாப்பிடலாம். இதே போல் மலச்சிக்கல் ஏற்படும் போது நீராகாரம் குறைய உண்ணல் நிறைய தண்ணீர் குடித்தல் நார்ப்பொருட்கள் அதிகம் சாப்பிட வேண்டும் என்றார். இதனைத் தொடர்ந்து குறித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு ஓய்வூதிய சமூக சேவைச் சபையினால் மூலிகைச் செடிகள் வளர்ப்பதற்காக 30 இறப்பர் பூச்சாடிகளும், நோயாளிகளுக்கு குளிசைகள் வழங்குவதற்கு 1000 காகித உறைகளும் அன்பளிப்பு செய்யப்பட்டன. அன்பளிப்புக்களை ஓய்வூதிய சமூக சேவைச் சபையின் தலைவர் அல் ஹாஜ் ஏ.எல்.எம்.யாசீன் அவர்கள் வழங்கினார். இறுதியாக ஆயுள்வேத வைத்திய அதிகாரி டொக்டர் ஜனாப். எம்.சி. எம். காலித் அவர்களுக்கு சபையின் செயளாளர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எல். சாய்வுத்தம்பி அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் ஸலவாத்துடன் நிறைவு பெற்றது.

(நமது நிருபர்)




சம்மாந்துறை சேிய பாடசாலையில் தரம் 10இல் கல்வி பயிலும் TL. முஹம்மட் அன்பாஸ் சிறு வயது முதல் தகவல் தொடர் பாடல் துறையில் (ICT) யில் ஆர்வமுள்ளவராகக் காணப்பட்டார். தான் ஏதேனும் படைக்க வேண்டும் என்ற நோக்கத்தின்

தொடர் பக்கம் 09 இல்



# பள்ளிவாசல் அறிமுகம்

தயாரிப்பு:-
கலாபூஷணம் எஸ்.அப்துல் றாஸீக் JP
(ஓ. பெற்ற அதிபர். மு.தவிசாளர்- மஜ்லிஸ் அஷ்ஷூறா. சம்மாந்துறை)




## காட்டவுலியாப் பள்ளி வாசல் (ஷியாறம்)

இப் பள்ளிவாசல் சேனைவட்டை வயல் வெளியில் அமைந்திருப்பதாகும். காட்டவுலியா என்ற ஷியாரம் ஒன்றும் இங்கு நீண்ட நாட்களாக அமைந்திருப்பதும் மக்கள் இக் கபுரடிக்கு சங்கை செய்து வருவதும் வழமையாகும். சேனைவட்டையில் வேளாண்மை செய்யும் தமிழ் மக்களும் காட்டவுலியாவை சங்கை செய்தும் வந்துள்ளனர். ஒரு முறை மழை பெய்யாததால் கடும் வரட்சி ஏற்பட்டு வேளாண்மைகளும் பாதிக்கப்பட்டன. காவல் பறனில் படுத்துக் கொண்டிருந்த வீரமுனையை சேர்ந்த போடியார் ஒருவர் தனது வயல் நிலத்தின் பரிதாப நிலையை கண்டு மழை வேண்டிய பாடல் ஒன்று "காட்டோரம் குடியிருக்கும் காட்டவுளியா அப்பாவே என்ற பயிரு முளைத்திட ஒருபாட்ட மழை பேஞ்சிரட்டும்" என்று மனமுருகி சரிசாமத்தில் (நடு இரவில்) பாடியதாகவும், உடனே மழை பெய்துள்ளதாகவும் பேசப்பட்டுவரும் உசாத்துணையான தகவலாகும். 1800 ஆம் ஆண்டளவில் கோட்டுப்போடியார் (கொலட்டுப் போடியார்)என்றழைக்கப்பட்ட மீராசாய்வுசேனைவட்டைக்கு வட்டானையாக கடமையாற்றிக்கொண்டிருந்த காலகட்டம். சேனைவட்டையில் ஆங்காங்கே சிறு சிறு பற்றை காடுகள் இருந்தன. இக் காடுகளில் பன்றி போன்ற மிருகங்கள் தங்கியிருந்து பயிர்களுக்கு சேதம் விளைவித்ததுக் கொண்டிருந்தன. இதனால் வட்டானை இக்காடுகளை வெட்டி நெருப்பு மூட்டி துப்பரவு செய்யுமாறு கட்டளையிட்டார். இதன் நிமிர்த்தம் தற்போது காட்டவுலியா பள்ளி இருக்கும் திடலும் காடாகவே காட்சியளித்தன. இதைச் சுற்றியுள்ள வயற்காரர்கள் காடுகளை வெட்டி நெருப்பு மூட்டியுள்ளனர். அப்போது அதிர்ச்சியும் ஆச்சரியமும் தரக்கூடியதான நிகழ்வொன்று நடைபெற்றது. ஒரு குறிப்பிட்ட பகுதி நெருப்பு எரியாது காட்சியளித்தது மீண்டும் மீண்டும் நெருப்பு மூட்டியும் அப்பகுதி எரியவில்லை. வட்டானைக்கு அறிவிக்கப்பட்டது. வயல் சொந்தக்காரர்கள், சம்மாந்துறை மக்களும் இவ் அதிசயத்தை கேள்வியுற்று கூட்டம் கூட்டமாக கூடினர். வட்டானையும் இன்னும் சிலரும் எரிபடாத பகுதிக்குள் உட்பிரவேசித்தனர். என்ன ஆச்சரியம் வெள்ளை பிடவையால் மூடப்பட்ட நிலையில் எவ்வித சேதங்களும் இன்றி மையத் ஒன்று காட்சியளித்தது. அவ்மையத்தை அடக்கஞ் செய்து பாதுகாப்புக்காக கம்பு தடியினால் குடில் அமைத்து இலுக்குப் புள்ளினால் வேயப்பட்டு கூறை அமைத்து பராபலிக்கப்பட்டன. காட்டிலே கண்டெடுத்த படியால் "காட்டவுலியா" என மக்களால் அழைக்கப்படலாயிற்று. சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்துக்குள்ளும் காட்டவுலியா ஷியாரம் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு நம்பிக்கையாளர் சபைக் காலத்திலும் வட்ட விதானைகளின் காலத்திலும் இக்கட்டிடம் அடிக்கடி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அக்கால விவசாய நடை முறையில் வயற்காரர்கள் தமது வயல் வெளிகளில் "பறன்" அமைத்து தங்கி வருவதுண்டு அதனால் இச் ஷியாரம் அமைந்துள கட்டிடம் பள்ளியாகவும் மக்கள் தொழுது வரும் இடமாகவும் பயன்பட்டன. மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்களால் கிணறு ஒன்று கட்டப்பட்டது. மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்களால் கூரைத் திருத்தமும் செய்யப்பட்டன. மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ULM.முகையதீன் அவர்களால் மலசலகூடம் அமைக்கப்பட்டன. சேனை வட்ட வீதியிலிருந்து காட்டவுலியாப் பள்ளிக்கு செல்வதற்கான ஒழுங்கான பாதை இருக்கவில்லை "நடை வரம்பு" மாத்திரம் பயன்பட்டன. இக்கால கட்டத்தில் வட்ட விதானையாக கடமையாற்றிய அல்ஹாஜ் MI.முகம்மது தம்பி (மீற்றர் வட்டானை) அவர்களின் முயற்சியினால் இப்பாதை அகலமாக்கப்பட்டு பள்ளிவளவிற்குள் வாகனங்கள் செல்லக் கூடியதாகவுள்ளன. வட்டைக் கந்தூரிகள் இங்கு வருடா வருடம் இங்கு சிறப்பாக நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆரோக்கியமும் சுகவாழ்வும்

தயாரிப்பு:-
Dr. MCM.காலித் (BUMS-SL)- வைத்திய அத்தியட்சகர்
மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, சம்மாந்துறை



## இருதய நோய்கள்

இன்று எமது பிராந்தியத்தில் மட்டுமல்லாது முழு இலங்கையிலும் தொற்றா நோய்களின் அபாயம் மிகவும் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் மனித சமூகம் ஆரோக்கியம் குன்றியவர்களாக வாழ வேண்டியுள்ளது. குறிப்பாக இருதய நோயை எடுத்துக் கொண்டால் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இருதய நோயி னால் ஏற்படுகின்ற இறப்பு அறுபது வயதினைத் தாண்டிய பருவத்தில் ஏற்படுகின்ற திடீர் மரணங்கள் என எண்ணப்பட்டது. ஆனால் இன்று இவ் இருதய நோய் ஏற்படுகின்ற வயதெல்லையாக முப்பது என குறைந்து கொண்டு வருகின்றது. எனவே, இது பற்றிய அறிவை எமது சமூகத் தின் அனைத்து தரப்பினரும் அறிந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

### இருதய நோய்கள் ஏற்படக் காரணம்:-

1. உடற்பருமன் அதிகரித்தல்.
2. குருதியில் கொழுப்புச்சத்து அதிகரித்தல்.
3. இரத்த அழுத்தம் உயர்வடைதல்.
4. நீரிழிவு நோய்க்குள்ளாகுதல்.
5. புகைத்தல்.
6. மன அழுத்தம் அதிகரித்தல் அல்லது பதட்டமான வாழ்க்கை.
7. அடிக்கடி கோபம் ஏற்படல்.
8. இன்னும் சில அறியப்படாத காரணங்கள்.






### உணவு முறைகள்:-

1. தீட்டாத குரக்கன், தினை, கோதுமை, கைக்குத்த ரிசிகள். இவற்றில் மாப்பொருளுடன் நார்ப் பொருள், புரதம், விற்றமின்கள் காணப்படும். அத்தேடு நார்ப் பொருளானது விரைவான சமிபாட்டை தடுத்து மீண்டும் பசியெடுக்க அதிக நேரம் தேவைப்படும். எனவே குறைந்த உணவே உட்கொள்ள நேரிடும்.
2. தோடம் பழம், அப்பிள், வாழைப் பழம், விளாம் பழம், வில்வம் பழம், மாதுளம் பழம்.
3. இலைக்கறிகள், கீரை வகைகள், காய் கறிகள்:- பயிற்றங் காய், பீர்க்கங்காய், பாகற்காய், புடோலங்காய், முருங்கைக் காய், வெள்ளரிக் காய், கொகில, வாழைப்பூ, லீக்ஸ், கோவா, வெண்டிக்காய், தக்காளி, வெங்காயம் போன்றன.
4. கடல் மீன்கள், நன்னீர் மீன்கள் உகந்தவை.
5. ஆடை நீக்கிய பால், பருப்பு, கடலை, பயறு, சோயா
6. நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய்.

### தவிர்க்க வேண்டிய உணவுகள்:-

1. கொழுப்புணவுகளான பசு நெய், எருமை நெய், பட்டர், மாஜரீன், தேங்காய் எண்ணெய்.
2. மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, முட்டை மஞ்சக் கரு
3. முழு ஆடைப் பால் மா
4. கோழி இறைச்சி குறைவான கொழுப்பை கொண்டிருப் பினும் தவிர்ப்பது நல்லது.

### இருதய நோயாளர்களுக்கு பயன் தரும் மூலிகைகள்:-


1. மதுர மரம் (பட்டை)
2. வெள்ளைப்பூண்டு
3. உலுவா
4. கறி வேப்பிலை
5. கருஞ்சீரகம்
6. தேன்

### உயர் குருதி அமுக்கம் உள்ளவர்களுக் கான சில கை மருந்துகள்.

1. வெள்ளைப்பூண்டு, உலுவா, கறிவேப்பிலை என்பவற்றை கஷாயம் செய்து 1 கப் அளவு காலை, மாலை குடித்தல்.
2. வெள்ளைப்பூண்டை தேனில் ஊற வைத்து ஒவ்வொரு காலையும் உண்ணல்.
3. சாத்தாவாரி, உலுவா, சேர்ந்த இலைக் கஞ்சி காலையில் குடித்தல்.
4. வத்தப்பழம், வெள்ளரிப் பழம் உணவில் அதிகமாகச் சேர்த்தல்.

(வைத்திய ஆலோசனையுடன் மேற்கொள்ளவும்)

# மாணவர் பல்சுவை அரங்கம்



## மக்கள் பிரதி நிதிகள்

| நாடு | இடங்கள் |
|---|---|
| 1. அமெரிக்கா | காங்கிரஸ் |
| 2. அயர்லாந்து | டெயில் |
| 3. அவுஸ்திரேலியா | பெடரல் பாராளுமன்றம் |
| 4. ஆப்கானிஸ்தான் | சூரா |
| 5. இந்தியா | லோக்சபா |
| 6. இலங்கை | பாராளுமன்றம் |
| 7. இத்தாலி | செனட் |
| 8. இஸ்ரேல் | நெஸ்ஸட் |
| 9. ஈரான் | மஜ்லிஸ் |
| 10. ஐஸ்லாந்து | அலிதிங் |

(றிமோஸ்-சம்மாந்துறை)

## உலகின் பிரதான உற்பத்திகள்

1.மோட்டார் வாகனங்கள் – ஐ.அமெரிக்கா,யப்பான்,ஜெர்மன்.

2.கம்பளி ஆடைகள் – அவுஸ்திரேலியா

3.தேயிலை – சீனா,இந்தியா,இலங்கை

4.செம்பு – சிலி

5.கொக்கோ – கானா

(ஆபிக் இலாஹி–சம்மாந்துறை)

## வரலாற்றில் புகழ் பெற்ற சில பிரமுகர்கள்.

1. வில்லியம் ஷேக்ஸ்பியர் – உலகப் புகழ் பெற்ற வரலாற்றாசிரியர்
2. பேர்னாட்டிஷா – ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்.
3. ஆபிரகாம் லிங்கன் – ஐக்கிய அமெரிக்காவின் 18வது ஜனாதிபதி
4. ஜோர்ஜ் வாஷிங்டன் – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி
5. அரிஸ்டோடில் – கிறிஸ்தவத்துக்கு முற்பட்ட கால கிரேக்க தத்துவஞானி

–பாத்திமா சினோபா –சம்மாந்துறை–

திறன்–08 இன் தொடர்ச்சி.....

## நமது மண்வாசனை

### வந்தரிசிக்கும் பப்புளுக் காய்க்கும்

இறைச்சி சேர்த்து கறி சமைப்பர். வந்தரிசிச் சோறும், பப்புளுக் காய் கறியும் மிகவும் சுவையானது. வயல் விதைப்பு வேலைகளில் ஈடுபடுபவர்க்கும் இச்சோறு கறிதான் அன்றைய கால கட்டங்களில் பெரும்பாலும் உபயோகப்பட்டன என்பது அறிய முடிகின்றது. இதுபோல்தான் அறுவடைகாலங்களில் பெரும் மழைபெய்யுமானால் நெல் மணிகள் ஈரமாகிவிடும். அதனால் நெல் கருப்பாகி முளைக்கும் தன்மையை இழந்து விடும். அதனால் இந்நெல்லை 'மடி நெல்' என்றழைத்தனர். அரிசியும் கறுப்பாகவிருக்கும். "மடி அரிசி" என்றும் அழைக்கப்பட்டன. விவசாயிகள் மடி நெல்லை சந்தைப்படுத்துவதிலும் மிகவும் கஷ்டங்களுக்கு உள்ளாகினர். 1965ம் ஆண்டில் நமது பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தினால் அறுவடைப் பயிர்கள் எல்லாம் மடி நெல்லாகிய சம்பவம் ஊர் அறிந்த விடயமாகும். நெல் சந்தைப்படுத்தும் மேல் அதிகாரி ஒருவர் "ஏன் மடி நெல்லை விதைத்தீர்கள்" என்று கேட்டு விவசாயிகளை ஆத்திரமடையச் செய்த சம்பவங்களும் உண்டு. 'மடி நெல்' என்பது நெல் வகைகளில் ஒன்றுதான் என்பது அவ் அதிகாரியின் அறிவு. மடி நெல்லும் ஒரு விதமான வந்த நெல்தான் என்றால் மிகையாகாது. தமிழ் அகராதியின் படி "வந்தை" என்பது 'மலடி' என்ற கருத்தைத் தருகின்றது. முளைக்காத நெல்லுக்கு நமது பாமர மக்கள் சூட்டிய பெயர் எப்படி?

(தாஹிறா ஏ றாஸீக்–சம்மாந்துறை)

## முட்டாளும் புத்திசாலியும்

மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றிற்குள் குதித்தது. அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. நான் வெகுநாட்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி'' எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்குத் தந்தது. இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு'' எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன. இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அக்கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?'' எனக் கேட்டது. நான் ஏரியில் தங்கி இருந்தேன்'' என்றது ஏரித் தவளை. ஏரியா? அப்படியென்றால் என்ன?'' எனக் கேட்டது கிணற்றுத் தவளை. இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு'' என்றது ஏரித் தவளை. இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?'' என்று கேட்டது கிணற்றுத் தவளை. இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி'' என்றது ஏரித் தவளை. கிணற்றுத் தவளை நம்பவில்லை. நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது'' என்றது. ஏரித் தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத் தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்ற தவளைகளும் நம்பவில்லை. எல்லாத் தவளைகளும் ஏரித் தவளையைப் பார்த்து நீ பொய்யன், முரட்டன், உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து'' என்று கூறி ஏரித் தவளையைத் தாக்க முயன்றன. அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஒரு பெண் தோண்டியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை, தோண்டித் தண்ணீருடன் மேலே சென்றது. தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

**முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.**

–ஏ.எம்.சிபாயா –சம்மாந்துறை–

# தீனுல் இஸ்லாம்

தயாரிப்பு – மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)

## உள்ளங்களில் தவறான உணர்வுகளை உண்டாக்குவது ஷைத்தானின் செயல்.

**அன்னை ஸபிய்யா [ரழி] அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

றசூலுல்லாஹ் [ஸல்] அவர்கள் ரமழான் மாதத்தின் பிற்பகுதியில் கடைசிப் பத்து தினங்களிலும் பள்ளி வாசலிலே தங்கி [இஃதிகாப்] இருப்பது அவர்களது வழக்கமாகும். இந்த நாட்களில் நான் அவர்களை சந்திக்கச் சென்று அவர்களுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பின் வீட்டிற்கு வருவேன். ஒருநாள் நான் றசூலுல்லாஹ் [ஸல்] அவர்களுடன் பேசி விட்டு எழுந்த போது பள்ளியின் வாசல் வரை அவர்கள் வந்து என்னை வழியனுப்ப வந்தார்கள். அப்போது அன்சாரிகளில் இருவர் அவ்வழியே நடந்து சென்றார்கள். முதலில் றசூலுல்லாஹ் [ஸல்] அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள். அவர்களும் பதில் ஸலாம் கூறிச் சென்று கொண்டிருந்தனர். அவர்களை அழைத்த றசூலுல்லாஹ் “சற்று நில்லுங்கள் இவர் எனது மனைவி ஸபிய்யா பின்தி ஹுசையை” ஆவார் என்று அவர்களிடம் கூறினார்கள். இதைக் கேட்ட அவ்விருவரும் ஆச்சரியப்பட்டு “ஸுப்ஹானல்லாஹ்! நாயகமே தங்களை நாம் அவ்வாறு நினைப்போமா” என்று கூறினர். இதைக் கேட்ட றசூலுல்லாஹ் [ஸல்] “நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் இரத்த நாளங்களில் ஊடுருவி இருக்கின்றான். உங்கள் உள்ளங்களில் தவறான எண்ணங்களை அவன் விதைத்து விடுவான் என நான் அஞ்சுகிறேன்” என்று இறைத்தூதர் [ஸல்] அவர்கள் கூறியதாக அன்னை ஸபிய்யா [ரழி] அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

–ஸஹீஹுல் புகாரி–

[அல்–ஹாஜ் மௌலவி ஏ.ஸி.ஏ.எம்.புகாரி [கபூரி] அவர்களின் வரலாற்றிலோர் ஏடு நூலிலிருந்து]

## ஒரு முஸ்லிமின் பண்புகள்

1. ஒரு முஸ்லிம் தனது வாழ்வை முழுமையாக இறைவனுக்காக அர்ப்பணித்து, தனது அனைத்து காரியங்களையும் இறை பொருத்தத்தை நாடியே செயலாற்ற வேண்டும்.
2. அவன் தன்னைப் படைத்த இறைவனையன்றி வேறு யாரையும் வணங்கக் கூடாது. தன் பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும். பிறருக்கும் முடிந்தளவு உபகாரம் புரிய வேண்டும்.
3. ஒரு முஸ்லிம் இறைவன் தடை செய்துள்ள கொலை, களவு, விபச்சாரம், இலஞ்சம், சூது, வட்டி, மது அருந்துதல், போதை வஸ்து பாவித்தல், ஊழல், மோசடி, போன்ற கொடிய பாவங்களில் ஒரு போதும் ஈடுபடக் கூடாது.
4. ஒரு முஸ்லிம் எப்போதும் பொய் பேசாது உண்மையே பேச வேண்டும்.
5. ஒரு முஸ்லிம் வாக்களித்தால் மாறு செய்யக்கூடாது. அவன் நம்பிக்கை நாணயத்துடன் நடக்க வேண்டும்.
6. ஒரு முஸ்லிம் மற்றவர்களைப் பற்றி புறம் பேசவோ, மற்றவர்களின் குறைகளைத் துருவித் துருவி ஆராயவோ, பிறரை மானபங்கப் படுத்தவோ கூடாது.
7. ஒரு முஸ்லிம் தைரியமுள்ளவனாக இருக்க வேண்டும், கோழையாக இருக்கக் கூடாது.
8. ஒரு முஸ்லிம் உண்மையை ஆதரிக்கும் விடயத்தில் நிலையானவனாகவும், உண்மையை எடுத்துக் கூறுவதில் தைரியமுள்ளவனாகவும் இருப்பான்.
9. அடுத்தவர் தன்னை எதிர்த்த போதும் ஒரு முஸ்லிம் நீதமாக நடந்துக் கொள்ள வேண்டும். அடுத்தவரின் உரிமையை சட்ட விரோதமாக மீறவும் கூடாது. அடுத்தவர் மூலம் அநீதம் செய்யப்படுவதை அனுமதிக்கவும் கூடாது. அவன் வலிமை உள்ளவனாகவும் தன்மானத்தை எவரிடமும் இழக்காதவனாகவும் இருக்க வேண்டும்.
10. ஒரு முஸ்லிம் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் விரும்ப வேண்டும். வதந்திகளைப் பரப்பி விடுபவனாகவோ, வன்முறைகள், குழப்பங்களைத் தூண்டுபவனாகவோ இருக்கக் கூடாது.
11. ஒரு முஸ்லிம் தன் செயற்பாடுகளை இயன்றவரை நேர்த்தியாக செய்ய வேண்டும்.
12. ஒரு முஸ்லிம் கர்வமற்றவனாகவும், நற்குணமுள்ளவனாகவும் இருக்க வேண்டும்.
13. ஒரு முஸ்லிம் சிறியோருக்கு இரக்கம் காட்டுபவனாகவும், முதியோருக்கு மதிப்பளித்து நடப்பதோடு இறைவனின் அனைத்துப் படைப்பினங்களோடும் ஜீவகாருண்யம் பேணி நடந்து கொள்வதும் அவசியமாகும்.
14. அவன் நன்மை புரிவதோடு அடுத்தவரையும் நன்மை புரியத் தூண்ட வேண்டும். அவன் தீமை புரிவதை தவிர்த்துக் கொள்வதோடு அடுத்தவரையும் அதிலிருந்து தடுக்க வேண்டும்.
15. ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் மார்க்கம் நிலைத்திருக்கவும், உலகம் முழுவதும் பரவுவதற்கு முயற்சிக்கவும் போராடவும் வேண்டும். இஸ்லாத்தின் வரையறையை மீறாதவனாக அனைத்து காரியங்களையும் மேற்கொள்வான், இஸ்லாத்தின் வெற்றிக்கென சட்ட விரோத செயல்கள் எதனையும் மேற்கொள்ளக் கூடாது.

## திறனொளியின் கேள்வி பதில்

தயாரிப்பு:–

மௌலவி ஐ.எல்.அப்துல் றஹீம் (தப்லீகி)

கேள்வி பதில் –05 இல் கேட்கப்பட்ட வினாவுக்கான சரியான விடை:– முஹர்ரம்

### கேள்வி பதில் –05 இற்கான வெற்றியாளர்

சரியான விடை வந்து சேரவில்லை

### கேள்வி பதில் –06

**திறனொளியின் “கேள்வி பதில் –06” இற்கான கேள்வி**

நபி (ஸல் அவர்கள் பிறந்த வருடம் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?


**சரியான விடையினை தபாலில் எழுதி அனுப்பி பெறுமதியான பரிசினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**பரிசு வழங்குவோர்:–**

சமூக நலப் பணிகளில் முன்னின்று உழைத்து வரும் சம்மாந்துறை இஸ்ஹாக் (IO) பவுன்டேசன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் ஜனாப் எம்.எல்.இஸ்ஹாக் அவர்கள்.

விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:–

**கேள்வி பதில் – 06**
**திறனொளி**
**112, பிரதௌஸ் பள்ளி வீதி**
**சம்மாந்துறை–03**




# கவிதை தூறல்கள்

தயாரிப்பு - கவிதாயினி எம்.ஐ. நமீஸ் நிஷா

## உறவுகளின் உதறலும் உண்மையின் பதறலும்

----------------------

உணர்வுகளை கசந்து
உண்மைகளை - ஊமையாக்கி
உன்னதமான வாழ்க்கையொன்றை
தனதாக்கிட எண்ணுகிறது மனம்.
தன்னிகரில்லா தற்துணிவுடன்
தடைகள் - பலவந்தும்
தனையறியாமல் - ஆடிய கால்கள்
அடங்கியதே!.... சட்டென்று
உதவும் - கரம்
உத்தமராகும் - எண்ணம்
அத்தனையும்,
அருகியதே! அற்பநொடியில்
நன்றியற்ற தருணத்தில்.
நம் - எண்ணம்மட்டும்
நல்லதாகி,
என்ன பயன்
நாலுபேரும் - நல்லவரெனிலே!
நமக்கமைக்கும் - நன்றி
சந்தோஷம் - சில காலம்..
சங்கடம் - பல காலம்
பழகுகின்ற பழக்கங்கள்
உதறுகையிலே!
உறைக்கிறது - உள்ளம்.



-கியாஸ் ஏ புகாரி- (சம்மாந்துறை)

தடைகளும் - தெரியவில்லை
தந்திரமும் - புரியவில்லை
தன்நம்பிக்கையை
கையில் - கொண்ட எனக்கோ!
தள்ளிவிட்டது சிலரின்
அற்ப குணங்கள்.
மனிதா!
உன்னை நம்பு
உன் - இறைவனுடன்
இரசியம் - பகிரு
கண்ணாடி முன்னே!
கவலையை குமுறு
தாய் - மடியில் அழுதிடு
யார் - மடியிலும்
மடிந்திடாதே!....
நிமிர்ந்து நில்
துணிந்து செல்
யாரையும் - நம்பாதே!
இறைவனை நம்பு
உன் - கொள்கையை
என்றும் - மாற்றாதே!...
மற்றவர்களுக்காய்.
வாழ்ந்து ம
வீழ்ந்து மடியாதே!

### படத்திற்கான கவிதை இல:-02 க்கான கவிதை

உன் இள வயதினிலே
உனக்கு கிடைத்த
தலை விதியா? இது!
தடைதாண்டலா? இது!

எம்.ரீ.எப்.றீஷ்மா
சம்மாந்துறை


கவிக் கடலில் கவி மீன்
வடிக்கும் அன்புக்கு இனிய கவிதா
நெஞ்சங்களே! உங்கள் கவிதைகளுக்குக்
களம் தருகிறது
திறனொளி. எழுதி அனுப்ப மறவாதீர்கள்!

### படத்திற்கான கவிதை இல: 03




இப்படத்திற்குப் பொருத்தமான
நான்கு வரிக் கவிதைகளை
எழுதி அனுப்புங்கள்
கவிதைத் தூறல்கள்
பகுதியில்
உங்கள் கவிதையும்
இடம்பிடிக்கும்.

"கவிதைத் தூறல்கள்"
படத்திற்கான கவிதை இல-03
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை-03




சம்மாந்துறை திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் வெளியிடப்படும் திறனொளி சஞ்சிகையினை சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து அல்-ஹாஜ் எஸ்.எல்.முஹம்மட் ஹனிபா அவர்களுக்கு பிரதேச செயலகத்தில் வைத்து சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், அறிவிப்பாளருமான ஏ.சி.நௌஷாத் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். அருகில் கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூஸா அவர்களும் காணப்படுகிறார்

(படம் -நையூப்)



பாடசாலை வாசிகசாலைகளுக்கும் திறனொளி சஞ்சிகை வழங்கும் பொருட்டு அதிபர்களிடம் கையளிக்கும் போது பிடிக்கப்பட்ட படங்கள்

(படங்கள்-நையூப்)



பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ MIM.மன்சூர் அவர்களின் பெரு முயற்சியினால் அன்மையில் காத்தான்ட வட்டை மாவடி இறக்கப் பாலத்திற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டதோடு பாலத்திற்கான வேலைகளும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் உடன் ஆரம்பித்தும் வைக்கப்பட்டது. இதன் மூலம் 1000க்கு மேற்பட்ட விவசாயிகளும், அப்பிரதேச குடியிருப்பு மக்களும் பெரிதும் நன்மை அடைவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

(நமது நிருபர்)

03ம் பக்கத்தொடர்....சம்மாந்துறை தேசிய பாடசாலை மாணவன்...

காரணமாக பல விடயங்களைக் கற்று கணினி மொழிகளை படித்து தான் கற்ற கல்வியை பிறரும் இலகுவில் கற்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இவர் புதியதொரு கணினி மென்பொருளை உருவாக்கியுள்ளார். அதாவது Wysiwyg Editor என அழைக்கப்படும் இந்த மென்பொருளை வைத்து தரம் 11ல் தகவல் தொடர்பாடத்தில் காணப்படும் HTML பாடத்தினை மிக இலகுவில் கற்று புரிந்து கொள்ளவும் வலையத்தளங்கள் மிக எளிதில் (graphically) உருவாக்கவும் இந்த மென்பொருள் உதவுகின்றது. இந்த செயற்பாட்டினை அறிந்த பாடசாலை அதிபர், தகவல் தொடர்பாடல் ஆசிரிய ஆலோசகர் மற்றும் ஆசிரியர்கள் இவரை பாராட்டும் முகமாக கடந்த 16.11.2017ம் திகதி இவருக்கு பொன்னாடை போர்த்தியும் சான்றிதழ் வழங்கியும் பாராட்டிய தோடு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். இதன்போது பிடிக்கப்பட்ட படங்களை பக்கம் 03 இல் காணலாம்.



# குர்ஆன் மத்ரஸா அறிமுகம்

தயாரிப்பு:- அல்-ஹாபிழ் PM.பர்ஹானுத்தீன்

[செயலாளர், ஜம்மிய்யதுல் குர்ஆனில் ஹக்கீம்]





## அல் மத்ரஸதுல் கன்ஸி லித்தத்ரீஸில் குர்ஆனில் கரீம்








நிறையுடைய வாழ்வலித்து நடு நிலத்தை காக்க வந்த மறைய ளித்த மாபெரும் புகழ் அனைத்தும். அல்ஹம்துலில்லாஹ்.

சம்மாந்துறை எனும் செளு செளிப்பான ஊரில் MRCA/QM/02 எனும் பதிவிலக்கத்தில் 267, மல் 13ம் வீதி, மலையடிக்கிராமம்-01 எனும் விலாசத்தில் அல் மத்ரஸதுல் கன்ஸி லித்தத்ரீஸில் குர்ஆனில் கரீம் எனும் அல் குர்ஆன் மத்ரஸா மிக சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது. மாஸாஅல்லாஹ். இம் மத்ரஸாவானது 2008ம் ஆண்டு அதனுடைய அழச்சுவட்டைப் பதித்துள்ளது. இப்போது 10 வருடங்களையும் தாண்டி மிக சிறப்பான முறையில் 115 மாணவ மாணவிகள் மற்றும் அதிபர் 2 முஅல்லிமாக்கள் சிறந்த நிர்வாகத்துடன் மிக சிறப்பான முறையில் நடை பெற்று வருகின்றது. அது மட்டுமன்றி இம் மத்ரஸா மாணவர்கள் அல்-குர்ஆனை சிறப்பாக ஓதி முடித்ததோடு ஜம்மியதுல் குர்ஆனில் ஹகீமினால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைகளிலும் சித்தியடைந்து வருட ஆண்டு விழாவில் இம் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு பட்டம் சூட்டப்படுகின்றனர். இது வரைக்கும் 92 மாணவர்கள் வெளியாகியுள்ளார்கள். இம் மத்ரஸாவானது முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலகத் திணைக்களத்தினால் பதியப்பட்டு அதன் அடிப்படையில் உள்ள பாட திட்டத்தின் படி அதாவது அஹ்லாக், தஜ்வீத், தப்ஸீர், போன்ற பாடங்களில் பொதுப் பரீட்சை நடாத்தப்பட்டு அதிலும் இம் மத்ரஸா மாணவர்கள் அனைவரும் கலந்து 100க்கு 92 வீத சித்தியை பெற்று இம் மத்ரஸாவினையும் அங்குள்ள நிர்வாகத்தினரையும், அதிபர், ஆசிரியர்களையும் கௌரவித்துள்ளனர் என்பதையும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். இம் மத்ரஸா மறுமை வரைக்கும் சிறப்பாக இயங்குவதற்கு எஎல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன். அல்ஹம்துலில்லாஹ்.


உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறியதை நான் செவியுற்றிருக்கிறேன்: "செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே உள்ளன. ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எதை எண்ணினானோ அதுவே கிடைக்கும். எனவே அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரை நோக்கி ஒருவன் ஹிஜ்ரத்தை மேற்கொண்டால் அவனது ஹிஜ்ரத் அல்லாஹ்-ரஸூலுக்காக மேற்கொள்ளப்பட்டதாக அமையும். ஒருவன் உலகச் செழிப்பை அடைவதற்காக அல்லது ஒரு பெண்ணைத் திருமணம்செய்வதற்காக ஹிஜ்ரத்தை மேற்கொண்டால் அவனது ஹிஜ்ரத் எதை நோக்கி மேற்கொண்டானோ அதைநோக்கியே அமையும்".

# நூல் அறிமுகம்

தயாரிப்பு: நௌஷாத் ஏ கரீம்

## கலாபூஷணம் ACAM.புகாரி மௌலவி அவர்களின் – வரலாற்றிலோர் ஏடு






1972ம் ஆண்டு ஜூன் மாதத்தின் இறுதி வாரத்தில் திருக்குர்ஆன் என்ற நிகழ்ச்சியில் ஒலிப்பதிவுக்காக இலங்கை வானொலி நிலையத்திற்கு சென்றிருந்தேன். ஒலிப்பதிவு முடிந்ததும் எனது நிகழ்ச்சியின் தயாரிப்பாளராகவிருந்த அல்–ஹாஜ் இஸட்.எல்.எம்.முஹம்மத் அவர்கள் முஸ்லிம் சேவையின் கட்டுப்பாட்டாளராக பணிபுரியும் அல்–ஹாஜ் வீ.ஏ கபூர் அவர்கள் என்னை அழைப்பதாக கூறினார். அறைக்குள் நாம் நுழைந்த போது எம்மை வரவேற்ற அவர் எனது நிகழ்ச்சிகள் பற்றி கலந்துரையாடினார். பின்னர் முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகள் அனைத்தும் இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரை நடைபெருகின்றது. ஒன்பது மணிக்கு பிரதான செய்திகள் ஒலிபரப்பப்படும். அந்தச் செய்திகளை கேட்பதற்காக ஐந்து நிமிடத்திற்கு முன்னரே தமிழ் பேசும் சகல நேயர்களும் வானொலியை திறந்து வைத்துக் கொள்வார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சகலரும் பயன் பெரும் வண்ணம் சிறு சிறு சம்பவ துணுக்குகளை ஒலிபரப்பினால் அதனை அனைவரும் கேட்கும் வாய்ப்பு கிடைக்கும். இவ்வாரான ஒரு நிகழ்ச்சியை தயாரித்து உங்களால் ஒலிபரப்ப முடியுமா? என்று என்னைக் கேட்டதும் நான் அதற்கு சம்மதித்தேன். இரவு எட்டு மணி ஐம்பத்து ஐந்து நிமிடத்திற்கு ஆரம்பித்து மூன்று நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளக் கூடியதாக நிகழ்ச்சிகள் அமைய வேண்டும் என கூறினார். இதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று மர்ஹூம்களான அப்துல் குத்தூஸ்,எம்.எம்.இர்பான், ஆஸாத் மௌலானா ஆகியோருடன் இஸட்.எல்.எம்.முஹம்மத் அவர்களும் கலந்து பேசி இறுதியில் வரலாற்றிலோர் ஏடு என்று பெயர் வைத்தால் என்ன? என்று கேட்டார் அந்த பெயரே பொருத்தமானது என சகலரும் ஆலோசனை கூறினர், இதன் பின்னரே 'வரலாற்றிலோர் ஏடு' என்று பெயர் சூட்டப்பட்டது. அதன் பின் அடுத்த நிகழ்ச்சி ஒலிப்பதிவுக்கு வரும்போது ஒரு வாரத்திற்கு ஒலிபரப்பக்கூடியதாகச் சில சுவையான சம்பவங்களை எழுதிக்கொண்டு வாருங்கள் என்னு என்னைப் பணித்தார். அவ்வாறே நிகழ்ச்சியை தயாரித்துக் கொண்டு சென்று ஒலிப்பதிவு செய்தேன்.1972ம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் நாள் எனது நிகழ்ச்சி இரவு 8.55 மணிக்கு 'வரலாற்றிலோர் ஏடு' என்ற பெயரில் ஒலிபரப்பாகத் தொடங்கியது. அடுத்த வாரம் ஒலிப்பதிவுக்காகச் சென்ற போது என்னை அழைத்த அல்–ஹாஜ் வீ.ஏ கபூர் அவர்கள் மிக உற்சாகமாகவும் சந்தோசமாகவும் இருந்தார்.என்னைக் கண்டதும் அன்புடன் கட்டித் தழுவி "ஹஸ்ரத் நமது நோக்கம் வீண் போகவில்லை. நிகழ்ச்சி நேயர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. உங்களது குரல் வளமும் மொழி நடையும் மிக எடுப்பாக இருக்கின்றது. இந்த நிகழ்ச்சியை நீங்களே தொடர்ந்து செய்யுங்கள். இந்த நிகழ்ச்சி பற்றி நான் பலரிடம் கலந்துரையாடிய போது சன்மானங்கள் இன்றி எம்மால் கலந்து கொள்ள முடியாதென்று மறுத்து விட்டனர். இந்நிகழ்ச்சி மூலம் உங்களுக்கு சிறந்த எதிர்காலம் உண்டு" என்று கூறினார். நான் அவரைப் பார்த்து "சேர் ஒரு காலத்தில் வானொலியில் பேச வேண்டுமென்ற ஆசை எனக்கிருந்தது. அதன் பின் நான் படித்தவற்றை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் ஒரு ஊடகமாகக் கருதி அதனை ஒரு 'தஃவா' பணியாகவே செய்து வருகிறேன். இந்த நிகழ்ச்சியையும் சிறப்பாக செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளீர்கள். அதனைத் தொடர்ந்து செய்து வருவேன்" என்று கூறினேன்.

நிகழ்ச்சி ஒலிப்பரப்பாக்கிக் கொண்டிருக்கும் போதே மக்கள் மத்தியில் அதன் பிரபல்யம் அதிகரித்துக் கொண்டு வந்தது. நமது நாட்டில் மட்டுமன்றி தமிழ் நாடு மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் பேசும் நேயர்களிடையே இந்நிகழ்ச்சிக்கு நல்ல மவுசு ஏற்பட தொடங்கியது இதை அவதானித்த சிலருக்கு 'ஏன் நாமும் அதைச் செய்யக் கூடாது' என்ற ஆசை மேலிட்ட போது அவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால் அந்த அளவுக்கு அது வெற்றியளிக்கவில்லை. வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி எனது நிகழ்ச்சி நடை பெற்று வந்தது. நான் அரசியல் சூறாவளிக்குள் சிக்கிய போது வானொலி நிலைய கதவுகள் சில காலங்கள் மூடப்பட்டன. பின்னர் அந்தக் கதவுகள் திறக்கப்பட்டு சந்தர்பங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் எனது சொந்தப்பணிகள் தடையாக நிற்பதால் தற்போது அந்த நிகழ்ச்சியில் எனது குரல் கேட்பது குறைந்து விட்டது எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போது மானவன். இப்படி வளர்ந்த நிகழ்சி காற்றோடு காற்றாகக் கலந்து விடாது ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற எனது அபிமானிகளின் வேண்டுகோளை நிறை வேற்றிக் கொள்ள எனக்கு இப்போது ஒரு வாய்ப்பு ஏற்ப்பட்டுள்ளது. "அல்ஹம்துலில்லாஹ்"

எழுத்தாளர்களே! நூல் அறிமுகம் பகுதிக்கு நீங்கள் வெளியிட்ட புத்தகத்தின் பிரதியொன்றை எமக்கு அனுப்பி வையுங்கள் நூல் அறிமுகம் பகுதியில் உங்கள் நூலும் இடம்பிடிக்கும்

நூல் அறிமுகம்
திறனொளி
112, பிரதௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை - 03

# விளையாடு களம்

**தயாரிப்பு:- ஏ. அக்கீல் சிஹாப்**

## சாதனை படைத்தார் சுரங்க லக்மால்!!

இந்தியா அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான சுரங்க லக்மால், முதல் 46 ஓட்டமற்ற பந்துகளை வீசி டெஸ்ட் போட்டிகளில் இச்சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னதாக ஜெரோம் டெய்லர் 2015ம் ஆண்டு அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக 40 ஓட்டமற்ற பந்துகளை வீசியிருந்தார். கடந்த 2001ம் ஆண்டிற்குப் பிறகு, தொடர்ச்சியான 7 ஓட்டமற்ற ஓவர்களை வீசி, 46 பந்துகளுக்கு பிறகு ஓட்டம் கொடுத்த வீரர் என்கின்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

## விடை பெறுகிறார் சயீட் அஜ்மல்

பாக்கிஸ்தான் அணியின் சிரேஷ்ட சுழற் பந்து வீச்சாளர்களில் ஒருவரான சயீட் அஜ்மல், தான் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறப் போவதாக ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். 2008ம் ஆண்டு தனது 32வது வயதில் தேசிய அணிக்காக அறிமுகமாகிய சயீட் அஜ்மல் அன்று முதல் அணியின் சிறந்த சுழற் பந்து வீச்சாளராக செயற்பட்டு வந்தார். இருப்பினும் இவருடைய பந்துவீச்சு முறையற்றதாக காணப்படுவதாக 2 தடவைகள் (2009, 2014) முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதுவரையில் 35 டெஸ்ட் போட்டிகளில் 178 விக்கட்டுக்களையும், 113 ஒரு நாள் போட்டிகளில் 184 விக்கட்டுக்களையும். 64 T20 போட்டிகளில் 85 விக்கட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். இதிலும் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கட்டுக்களை கைப்பற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## விளையாடி சம்பாதித்ததில் ரோஜர் பெடரர் முதலிடம்

டென்னிஸ் விளையாட்டின் ஜாம்பவானாக கருதப்படும் சுவிஸ் லாந்தின் ரோஜர் பெடரர், தன்னுடைய விளையாட்டின் மூலம் 1800 கோடி ரூபா சம்பாதித்து, அதிக சம்பாதித்தவர்கள் வரிசையில் கோல்ப் மன்னனை பின்தள்ளி தற்போது முதலிடத்தை பிடித்துள்ளார். இதற்கு முன்னராக உலகின் பணக்கார விளையாட்டாக கருதப்படும் கோல்ப் விளையாட்டின் மன்னனாக காணப்படும் டைகர் வுட்ஸ் முதலிடத்தில் இருந்தார். இவர் 1700 கோடி ரூபா சம்பாதித்து தற்போது இரண்டாமிடத்தில் காணப்படுகின்றார். ரோஜர் பெடரர் இதுவரையில் டென்னிஸ் விளையாட்டின் உயரிய தொடரான கிராண்ஸ்ட்லாம் பட்டத்தை 19 தடவைகள் கைப்பற்றி சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தகுதிச் சுற்றிலேயே வெளியேறியது இத்தாலி!!

### 12 வருடத்தின்பின் சுவீடன்

நான்கு தடவைகள் FIFA உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய பலம் பொருந்திய இத்தாலிய கால்பந்தாட்ட அணியானது, 2018 ரஷ்யாவில் நடைபெறவுள்ள FIFA உலகக்கிண்ண போட்டிகளுக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்துள்ளது. அத்துடன் 2016ம் ஆண்டுக்கு பிறகு முதற்தடவையாக சுவீடன் அணி தகுதிபெற்றுள்ளது. முதலாவது உலகக்கிண்ணத்துக்கு மறுப்பு தெரிவித்திருந்த இத்தாலி, இரண்டாவது தடவையாக உலகக்கிண்ணத்தை தவறவிட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

## பனிமூட்டம் காரணமாக போட்டி நேர மாற்றம்

டெஸ்ட் தொடர் முடிவடைந்ததும் இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக 3 ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் தர்மசாலாவில் டிச.10ம் திகதியும் மொகாலியில் டிச.13ம் திகதியும் நடைபெறவுள்ள முதல் இரு நாள் போட்டிகள் ஆரம்பமாகும் நேரத்தை இந்திய கிரிக்கெட் சபை மாற்றியுள்ளது. வழமையாக பகலிரவு போட்டியானது பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். ஆனால் அங்கு அந்த சமயம் கடும் குளிருடன் பனிப்பொழிவும் அதிகமாக இருக்கும் என்று சம்பந்தப்பட்ட மாநில கிரிக்கெட் சங்கங்கள் கூறியதால் இவ்விரு இடங்களிலும் ஆட்டம் காலை 11.30 மணிக்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 3-வது ஒரு நாள் போட்டி டிசம்பர் 17ம் திகதி விசாகப்பட்டினத்தில் திட்டமிட்ட நேரத்தில் ஆரம்பமாகும் (பிற்பகல் 1.30 மணி) அதில் மாற்றம் இல்லை என்றும் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



2017ம் ஆண்டின் இளையோருக்கான U-19 ஆசியக் கிண்ணத்தை ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியது.

# ஆங்கிலம் கற்போம்

By :
Mr. M.T. RuMi KhAAn
(Director of Royal Future
The college of effortless way)

## Psychology of Spoken English

சென்ற மாதம் ஆங்கில இலக்கன அடிப்படை (Basic English Grammar) பற்றி பார்த்தோம். இன்று பேச்சு ஆங்கிலத்தின் உளவியல் (Psychology of Spoken English) பற்றி பார்ப்போம்.

மாணவர் ஒருவர் இருக்கிறார் அவரின் தாய்மொழி தமிழ் என்று வைத்துக் கொள்வோம் நான் அவரிடம் தமிழில் இருக்கும் 10 பக்க கதையை படிக்க கொடுத்து 'இந்த கதையை படித்துவிட்டு இதை எனக்கு சொல்லுங்கள்" என்று கூறுகிறேன். நான் இதை சொன்னவுடன் அந்த மாணவர் கதையை படிப்பார். கதையை புரிந்து கொண்ட பிறகு, 10 பக்க கதையை 4 அல்லது 5 நிமிடங்களில் என்னிடம் சொல்லி முடிப்பார். மாணவர் கதையை என்னிடம் சொல்லும் போது மிகவும் இயல்பாக பேசுவார். மேலும்,அவர் எதற்கும் பதட்டப்படாமல் பேசுவார்.

நான் அதே மாணவரிடம் 10பக்க ஆங்கில கதையை படிக்க கொடுத்து இந்த கதையை படித்துவிட்டு அதை எனக்கு ஆங்கிலத்தில் சொல் லுங்கள் என்று கூறுகிறேன். அவர் கதையை படித்து நன்றாக புரிந்து கொள்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் புரிந்து கொண்ட கதையை என்னிடம் சொல்லும் போது கீழ்கண்ட இன்னல்களுக்கு ஆளாகிறார்.

1. அவர் ஆங்கிலத்தில் பேசும்போது கதையில் இருக்கும் ஆங்கில வாக்கியங்களை எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே பயன்படுத்தி பேசுவார்.
2. அவர் புரிந்து கொண்ட கதையை முதலில் தமிழில் மொழி பெயர்ப்பார் பின்னர் தமிழ் வாக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பார்.
3. அவர் தமிழ் வாக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போது தமிழ் வாக்கியத்தில் இருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அதற்குண்டான ஆங்கில வாக்கியத்தில் இருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அதற்குண்டான ஆங்கில வார்த்தையை பயன் படுத்தி ஆங்கில வாக்கியத்தை அமைப்பார். அவர் மனதில் தமிழ் வார்த்தைக்கு தகுந்த ஆங்கில வார்த்தை உதிக்க வில்லை என்றால் அவர் மனதில் படபடப்பு ஏற்படும். அவரின் நாக்கு பிரலும், பயத்தில் அவருக்கு வியர்க்கும்.
4. ஆங்கிலத்தில் பேசும்போது அல்லது ஆங்கில வாக்கியத்தை அமைக்கும் போது எந்த conjunction யை பயன்படுத்துவது, எந்த tense யை பயன்படுத்துவது, எந்த preposition யை பயன்படுத்துவது என்று யோசிப்பார். அவர் அதிக நேரம்ஆங்கில வாக்கியத்தை இலக்கண பிழையின்றி அமைப்பதில் செலவிடுவார்.

அவர் தமிழில் பேசும் போது மேற் சொன்ன இன்னல் களுக்கு ஆளாவதில்லை ஆனால் ஆங்கிலம் பேசும் போது மட்டும் ஏன் இந்தப் பிரச்சினைகள்?

இப்போது நான் உங்களிடம் கேட்கும் முதல் கேள்வி:

நீங்கள் தமிழை படிக்கும்போது உங்களுக்கு 100மூ புரிகிறது. அதே போன்று ஆங்கிலம் படிக்கும்போது உங்களுக்கு எத்தனை சதவிகிதம் (மூ) புரிகிறது? உங்கள் பதில்?

முதல் நிபந்தனை : நீங்கள் தமிழை எப்படி 100% புரிந்து கொள்கிறீர்களோ அதே மாதிரி நீங்கள் ஆங்கிலத்தையும் 100% புரிந்துகொள்ள வேண்டும்.

நான் உங்களிடம் கேட்கும் அடுத்த கேள்வி :
நீங்கள் ஆங்கிலத்தில் பேசும்போது மேற்சொன்ன இன்னல்களுக்கு ஆளாகாமல் தமிழை போல் இயல்பாக பேசுகிறீர்களா?


இரண்டாவது நிபந்தனை : நீங்கள் நினைத்த கருத்துகளை எப்படி தமிழில் இயல்பாக பேசுகிறீர்களோ அதேபோல் ஆங்கிலத்திலும் பேச வேண்டும்.

எங்கள் முக்கிய நோக்கம் என்னவென்றால் மேற்சொன்ன இரண்டு நிபந்தனைகளையும் நிவர்த்தி செய்வதாகும்.

நீங்கள் தொடர்ச்சியாக திறனொளி சஞ்சிகை யில் எமது கட்டுரையை வாசிப்பதன் மூலமா கவோ அல்லது Royal Future யினை நாடு வதன் மூலமாகவோ மேற் சொன்ன இரண்டு நிபந்தனை களையும் நிவர்த்தி செய்து கொள்ளளாம்.

இன்ஷா அல்லாஹ் அடுத்த மாதம் இதனுடைய தொடர்ச்சியை எதிர்பாருங்கள்!..

It's easy if you try
Better luck next time........
With loving M.T. Rumaiz Muhammad
(CEO of Royal Future Sammanthurai)



## தேசகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் லயன் அல் ஹாஜ் ஏ.எம்.ஏ.றசீட்(ஜே.பி) அவர்கள்

சம்மாந்துறை 09ம் பிரிவைச் சேர்ந்த மர்ஹூம் அல்–ஹாஜ் எம்.எல்.அகமது முகையதீன் ஹாஜியானி ஆசியா உம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் ஆசிரியை ஹாஜியானி ஏ.எல். மர்சூனா உம்மா அவர்களின் அன்பு கணவரும் வைத்தியத் துறை மாணவன் ஏ.ஆர்.எம்.இஸ்தியாக் விஞ்ஞானத் துறை உயர்தர மாணவன் ஏ.ஆர்.எம்.இன்ஷாட் ஏ.ஆர். எம்.இன்டிகாப் ஆகியோரின் தந்தையுமான லயன் அல் ஹாஜ் ஏ.எம்.ஏ.றசீட்(ஜே.பி) அவர்களுக்கு அண்மை யில் பேரவை சமாதான நீதவான்கள் தெற்காசிய வலையமைப்பு மெங்கோ காடென் ஹோட்டல் அக்கரைப்பற் றில் வைத்து சமூக சமாதானத்துக்கான மற்றுமொரு தேசிய விருதான "தேசகீர்த்தி" விருது 2017 வழங்கி கௌர விக்கப்பட்டார்.

சமூக சேவைகளில் நல்ல ஈடுபாடுடைய இவருக்கு அகில இன நல்லுரவு ஒன்றியம் 2008.01.24 ம்திகதி "சாமசிறி சாமசக்தி" என்ற தேசிய பட்டம் வழங்கப்பட்டது. சமாதான நீதவான்கள் மனித உரிமை அமைப்பு இவ் அமைப்பின் அம்பாறை மாவ ட்ட அமைப்பாளராக நியமனம் வழங்கியதுடன் 2009.05.03ம் திகதி "தேசகீர்த்தி" என்றதேசியப்பட்டமும் வழங்கப்பட்டது. மலை நாட்டு கலை கலாசார அமைப்பு 2013.03.10ம் திகதி "இரத்தின தீபம்" என்ற தேசியப்பட்டம் வழங்கப்பட்டது. மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பு 2016.01.30ம் திகதி "அச்சுவேர்ஸ்" என்ற தேசியப்பட்டம் வழங்கப்பட்டது. சமூக சேவையில் புகழ் பெற்ற இவர் முழுநேர ஓர் சமூக சேவையாளர் பல அமைப்புக்க ளிலும் முக்கிய பதவிகளை வகிக்கிறார். மேலும் லயன் கிளப் ஒப் சம்மாந்துறை கோல்டன் சிற்றி அங்கத்துவ பணிப்பாள ராகவும் மத்தியஸ்தர் சபையிலும் அங்கம் வகிக்கிறார்.

1992ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரமதாச அவர் களால் கமக்காரர் ஒய்வூதியம் வழங்கும் தேசிய வைபவத் தில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவையிலும் சம்மாந் துறை எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றிலும் உள்ளார். இவர் அண்மையில் தாகங்கள் (கவிதைத் தொகுதி) எனும் சிறுவர் பாடல் புத்தகம் லயன் கிளப் ஒப் சம்மாந்துறை கோல்டன் சிற்றி ஊடாக வெளியிட உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் சாஹித்திய விழாவினை இவ்வாண்டும் வெகுசிறப்பாக நடாத்தும் பொருட்டு விழாவை நடாத்தி முடிப்பதற்கான சகல ஏற்பாடுக ளையும், ஆலோசனைகளையும் திட்டங்களையும் தேசபந்து பிரதேச செயலாளர் *SLM*.ஹனிபா அவர்க ளின் தலைமையில் கடந்த 20.11.2017ம் திகதி கலந்து ரையாடியபோது பிடிக்கப்பட்ட படங்கள். 2017ம் ஆண்டுக் கான சாஹித்திய விழா எதிர்வரும் டிசம்பர் மாத மளவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


புதிய மாணவர்கள் அனுமதி

ஸலாஹிய்யா அரபுக் கல்லூரி

பிபிலை, கொடிகமுவையில் அமைந்துள்ள மேற்படி அரபுக் கல்லூரிக்கு ஷரீஆ கிதாபு பிரிவு மற்றும் ஹிப்ழ் பிரிவுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ள விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும்

The Principal
Salahiyya Arabic College
Godigamuwa, Kotabowa, Medagama
0555611689,0753428348,0768365660,0729874456



# வாசகர் வட்டம்

தயாரிப்பு:- ஏ.ஆர்.எம்.ஹுசையின்



ஏ.எம்.அக்காஸ்
கமு/சது/தாறுஸ்ஸலாம்
மஹா வித்தியாலயம்
தரம்13A, கலைப் பிரிவு
விருப்பமான துறை:
சித்திரம் வரைதல்

உங்கள் புகைப்படம் மற்றும் விபரங்களை அனுப்பி
வாசகர் வட்டத்துடன் இணைந்து கொள்ளுங்கள்

**வாசகர் வட்டம்**
**திறனொளி**
**112. பிர்தௌஸ் பள்ளி வீதி**
**சம்மாந்துறை-03**



எல்.எம்.றிபான்
113, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை.
விருப்பமான துறை:
விளையாட்டு

## 'iTech Studies' - Android Application அறிமுகம்.

இன்றைய நவீன கணினி உலகில் மாணவர்கள் தமது கணினிக் கல்வி அறிவை மேம்படுத்துவது இன்றியமையாததாகிவிட்டது. பாடசாலை மாணவர்கள் முதற் கொண்டு தொழில்புரிபவர்கள் வரை அனைவராலும் இன்று கட்டாயமாகக் கற்க வேண்டிய ஒரு துறையாகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அமைந்துள்ளது. இதன் காரணமாக அனைவரும் இப் போட்டி மிகுந்த சூழலில் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தப் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். இத்தகையதொரு பிரச்சினையை நிவர்த்திக்கும் முகமாக பல்வேறுபட்ட அம்சங்களுடன் இலகுவில் கற்பதற்கென 'iTech Studies' எனும் Android செயலி சம்மாந்துறையைச் சேர்ந்த M.T. முஹம்மட் இர்ஷாட் எனும் மாணவரால் உருவாக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கணனித் துறையில் விஷேட கற்கை நெறியினை மேற்கொண்டு வருகிறார். இந்த செயலியானது மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் புரிபவர்கள், மற்றும் தொழில்நுட்பத் துறையோடு தொடர்புடைய அனைவருக்கும் மிகவும் பயன் தரும் வகையில் அமையப் பெற்றுள்ளது. இதில் தரம் 10 மற்றும் தரம் 11 இற்குரிய பல்வேறு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கடந்த கால, மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள், பாடநூல்கள் மற்றும் பல்வேறு தகவல் தொழில்நுட்ப பாடக் குறிப்புக்கள், தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய படங்கள் மற்றும் கருவிகள் என்பன கொண்டு காணப்படுகிறது. அது மாத்திரமன்றி அனைவரும் தனது கணனி, தொழில்நுட்ப அறிவைப் பரீட்சித்துப் பார்க்கும் முகமாக பல்வேறு கேள்விகளுடன் கூடிய Quiz பகுதியும் காணப்படுகிறது. இதில் காணப்படும் கேள்விகளுக்கு விடையளிப்பதன் ஊடாகத் தனது கணினி அறிவை மேம்படுத்துவது மட்டுமன்றி பரீட்சித்துப் பார்க்கவும் முடிவது இதன் சிறப்பம்சமாகும். இச் செயலியானது அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. Android Phone வைத்திருக்கும் அனைவரும் கீழே காணப்படும் இச் செயலிக்கான Link இனை கிளிக் செய்வதன் மூலம் உங்களது Phone இல் தரவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

Download Link : http://www.tinyurl.com/y6vj8s7s



M.T. Mohammed Irsad
(BA Spcl. in ICT - SEUSL)
Sammanthurai
irsadseu@gmail.com
0752841548

## அபிமானிகள் அபிப்பிராயம்!

**திறனொளி சஞ்சிகை பற்றி உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அபிமானிகள் அபிப்பிராயம் பகுதியில் பிரசுரிப்போம். எழுதி அனுப்ப மறவாதீர்கள் உங்களின் அபிப்பிராயம் திறனொளியின் வெற்றிக்கு வழி வகுக்கும்.**

காலம் கடந்தாலும் தொடராய் வெளிவர வேண்டுகிறேன்.

பாத்திமா இர்ஸானா
செந்நெல் கிராமம்
சம்மாந்துறை







www.nazathfm.com
திறமைக்கு களம், திறமைக்கு முதலிடம், திறமையின் தேடல்
அதுதான் திறனொளி
நீங்களும் அறிவிப்பாளராக வேண்டுமா?
உங்கள் குரலும் ஒலிக்க வேண்டுமா?
கிழக்கிலிருந்து உலகெங்கும் இணையத்தில் ஒலிக்கும்
உங்கள் அன்பு வானொலி நஸாத் FM இல் இணைந்து கொள்ள
இதோ அரிய சந்தர்ப்பம்! பதிவுகளுக்கு முந்துங்கள்
இணைந்து கொள்ளும் அனைவருக்கும்
ஊடகம் மற்றும் வானொலி கலையைப் பயிற்சியளிக்கப்பட்டு
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு
0777 22 42 91

அழகிய தூய 22 கரட் தங்க நகைகளின் அரங்கம்



# SP1 Jewellery

# எஸ் பி 1 ஜுவலரி

பழைய நகைகளை கூடுதல் விலைக்கு விற்கவும்





ஓடர் நகைகளை குறித்த தினத்தில்

நவீன டிசைன்களில் பெறவும்

எஸ் பி 1 ஜுவலரி





**SP 1 JEWELLERY**
04, Mohideen Mawatha Junction
Police Road
Sammanthurai
077 93 72 160
077 52 62 453

சம்மாந்துறையில் அண்மையில் உதயம் கண்டுள்ளது!



# Print House

ப்ரின்ட் ஹவுஸ் ADVERTISING

அனைத்து விதமான ப்ரிண்டிங் சேவைகளையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்

போட்டோ கொப்பி





றப்பர் ஸ்டாம்ப்

கலர் பிரிண்டிங்

விசிட்டிங் காட்

அடையாள அட்டைகள்

டைப் செட்டிங்


வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள்

ஒப்செட் பிரிண்டிங்



அம்பாறை வீதி
அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி முன்பாக
சம்மாந்துறை
077 263 5922




இச் சஞ்சிகையானது, சம்மாந்துறை திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் வெளியிடப்படுகிறது.